# கழகத் தலைவர் ஸ்டாலினும் தி.மு.க.வின் கட்டமைப்பும்!

‘இந்து தமிழ் திசை’ நாளேடு ஜூன் 10ஆம் தேதி ‘தமிழ்நாடு; தேர்தல் முடிவு சொல்லும் செய்திகள்’ எனும் தலைப்பில் ஒரு கட்டுரையை அதன் நடுப்பக்கத்தில் வெளியிட்டு இருக்கிறது. அதில், “1996, 2004ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டில் 39 தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணி முழுமையாக வெல்லவும் வழிவகுத்து இருக்கிறது என்றாலும் 2019இல் தி.மு.க. கூட்டணி 53.15% வாக்குகளையும் தி.மு.க. மட்டும் 33.53 வாக்குகளையும் பெற்றிருந்த நிலையில் 2024இல் அக்கூட்டணி 46.97% வாக்குகளையும் தி.மு.க. மட்டும் 26.93 வாக்குகளையும் பெற்றிருப்பது அக்கட்சியும் கூட்டணியும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய அம்சமாகும்” என்று எழுதியிருக்கிறது. இதில் ஆய்வுக்கு இடம் ஏது? அங்கலாய்ப்புத்தான் அதிகமாகத் தெரிகிறது.

இதே நாளேட்டில் ஜூன் 6ஆம் தேதி ‘கடந்த தேர்தலைவிட தி.மு.க.வுக்கு வாக்கு சதவிகிதம் சரிவு’ என்று ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறது. தி.மு.க. முழு வெற்றியைப் பெற்றுங்கூட ‘அங்கலாய்ப்பும் சரிவும்தான்’ இந்து தமிழ்திசைக்குத் தெரிகிறதே தவிர ஒன்றிய அரசின் ஆட்சியை முழு மெஜாரிட்டியோடு அமைக்க முடியாமல் தி.மு.க. ஒரு திணறலை பா.ஜ.க.வுக்கு ஏற்படுத்தியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டவில்லை.

தமிழ்நாட்டில் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் உருவாக்கிய கூட்டணியின் கட்டமைப்பு சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகும் தொடர்ந்தது. அதன் தொடர்ச்சி நாடாளுமன்றத் தேர்தலிலும் இயங்கலாயிற்று. கூட்டணியின் கட்டுக்கோப்பைக் குலையாமல் காத்துப் பக்குவமாக எடுத்துச் சென்று வெற்றிக் கனிகளைத் தொடர்ந்து மு.க.ஸ்டாலின் பறித்து வருகிறார். அதோடு மாவட்டங்களில் அதனைக் கொண்டு செலுத்தி இருக்கிறார். அங்கேயுள்ள கழக நிர்வாகிகளும் கூட்டணிக் கட்சியினரும் ஒருங்கிணைந்து பணியாற்றி இவ்வெற்றியை ஈட்டி இருக்கின்றனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளதைப் போல பா.ஜ.க.வுக்கு எதிரான இந்தியா கூட்டணிக் கட்சிகளின் ‘அமைப்பு முறை’ இந்தியாவின் ஒவ்வொரு மாநிலங்களிலும் அமைந்திருக்குமானால் பா.ஜ.க. அந்தத் தீயினில் தூசாகி இருக்கும், அந்த முழு வாய்ப்பு அமைந்திருந்தால் இன்றைய நிலையே வேறாக அமைந்திருக்கும். இதைப் பற்றி நாம் தொடர்ந்து பேச இக்கட்டுரையை எழுத முன்வரவில்லை. அது இப்போதைக்குத் தேவையும் இல்லை.

தொலைக்காட்சி விவாதங்களில் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இப்போதே சிலர் தி.மு.க.வுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலைப் போல இருக்காதாம்; அந்தத் தேர்தல்! சட்டமன்றத் தேர்தல் எப்படி அப்படி இருக்க முடியும்? தி.மு.க.வின் மேல் உள்ள கரிசனத்தால் அவர்கள் அப்படிச் சொல்வதில்லை. தி.மு.க. எப்படியும் வெற்றியைப் பெற்று விடுகிறதே என்ற ஆதங்கத்தால் அப்படிக் கூறுகிறார்கள்.

எத்தனையோ கட்சிகள் தேர்தலின்போது தோன்றி பிறகு மறைந்து போய் இருக்கின்றன. நீதிக்கட்சிக் காலத்தில் ‘பிபீள்ஸ் பார்ட்டி’ முதல் 1970களில் ‘கள் வேண்டுவோர் கழகம்’ வரை தேர்தலில் போட்டியிட்டு இருக்கின்றன. இன்று அவற்றின் சுவடுகள் இல்லை. இன்று சில கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் அதிக வாக்கு சதவிகிதம் பெற்றிருப்பதால் அங்கீகாரம் வழங்கலாம். சில கட்சிகளுக்கு அங்கீகாரம் இரத்து செய்யப்படலாம். ஒருவர் மறைந்துபோன அரசியல் கட்சிகளைப் பற்றி ஆய்வேடே எழுதியிருக்கிறார். தி.மு.க.வின் வெற்றி ஆயப்பட வேண்டிய அம்சம் என்பதன் நோக்கம் என்ன? சரிவு பாதாளத்திற்குச் சென்று விட்டது போல எழுதுவானேன்? தி.மு.க. ஈடுபட்ட அதன் முதல் தேர்தலிலேயே 10.56 சதவிகிதம் வாக்குகளைப் பெற்று அங்கீகாரம் பெற்றுவிட்டது.

தி.மு.க.வின் தோற்றம் சூன்யத்திலிருந்து தோன்றிவிடவில்லை. அது சங்ககால விழுமியங்களிலிருந்து எழுச்சியைப் பெற்றது; நூறாண்டுகளுக்கு மேலான முன்னோர் ‘ஸ்தாபன முறை’யான வழிகாட்டுதலை உடையது. 75 ஆண்டு கால வரலாற்றினை உடையது. 1957, 1962-ஆம் ஆண்டுகளில் ஒரு சேர நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களைத் தனித்துச் சந்தித்த அனுபவம் உடையது. தேர்தல் கூட்டணி சூத்திரத்தை தி.மு.க. நிறுவனத் தலைவரான அறிஞர் அண்ணா உருவாக்கினார். அது இன்று வரை காலத்திற்கேற்ற நிலையைப் பெற்றுத் தொடருகிறது.



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

கலைஞர் காலத்தில் கூட்டணி சூத்திரம் 1971 முதல் அந்தந்தக் கால அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. அவை தேசிய அளவுக்கான அமைப்புகளாகவும் கட்டமைக்கப்பட்டன. அறிஞர் அண்ணா கால கூட்டணி சூத்திரம் மாநிலத்திற்கு மட்டுமே பயன்பட்டது. அப்போதைய அரசியல் தேவையாக அது இருந்தது. கலைஞர் காலத்தில் கூட்டணியின் உயரம் தேசிய அளவில் வளர்ச்சி பெற்றது. இதனால் கலைஞர் பிரதமர்களை, குடியரசுத் தலைவர்களை அடையாளங் காட்டும் வல்லமையைப் பெற்றார்.

சிலபோது தோல்விகளைத் தழுவுகிற நேரத்தில் அமைப்பை முன்னோக்கிச் செலுத்த வேண்டும். பின்னடைவு என்கிற பேச்சே ஸ்தாபனத்தில் எழக்கூடாது. அதற்கான போராட்ட வாய்ப்பை ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் வழங்குகிறார்கள். கொள்கையை வழுவுவார்கள். அதனால் மக்கள் திரட்சி அமைப்பின் பின்னே எழும். இந்த ஆற்றலைத் தலைமை இயல்பாகப்பெறும். அப்போது மக்கள் தி.மு.க.வைப் புறக்கணித்து விட்டோமே என்ற வருத்தத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இதை நாம் மக்கள் பேச கேட்டிருக்கிறோம். இந்த அனுபவத்தை பிற அமைப்புகள் பெற்றிருக்க முடியுமா என்று நாம் அறிய முடியவில்லை.

தி.மு.க.வின் போராட்டங்கள் என்பது, ஜனநாயகப் பூர்வமானது. தமிழர்களின் தனித்தன்மையைப் பேணவும் கொள்கையை வலியுறுத்தவும் 1950 முதல் 1967 வரை தி.மு.க.வின் போராட்டங்கள் நிரம்ப நடந்தன. ஒரு மாதம் முதல் மூன்றாண்டுகள் வரை சிறைத் தண்டனை பெற்றவர்கள் மிகப் பலர். போராட்டங்களின்போது துப்பாக்கிச் சூடுகள் ஏற்படுத்தும் மரணங்கள், இதர விதமான மரணங்கள் என நிகழ்ந்து இருக்கின்றன. இவற்றின் பட்டியல் நீண்டது.

இப்படிப்பட்ட தியாகிகளின் அமைப்புதான் - ஸ்தாபனம்தான் தி.மு.க. தமிழ்நாட்டில் வேறொரு கட்சிக்கு கடந்த 75 ஆண்டுகளில் இவ்வளவு மரணங்கள் நிகழ்ந்திருக்குமா-நிகழ்ந்திருக்காது என்றே சொல்லத் தோன்றுகிறது.

அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் சகாப்தத்திற்குப் பிறகு நாம் இப்போது மு.க.ஸ்டாலின் சகாப்தத்தில் இருக்கின்றோம். இவரும் அம்மாபெரும் தலைவர்களைப் போலவே அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கூட்டணி சூத்திரத்தை வகுக்கிறார். கூட்டணியை வழி நடத்துவதில், அதனை அணைத்துப் போவதில் மு.க.ஸ்டாலின் வல்லவராகத் திகழுகிறார். அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் வழித்தோன்றல் என்பதை மெய்ப்பித்து வருகிறார். கூட்டணி அமைந்ததற்குப் பிறகு மு.க.ஸ்டாலினின் பணி மிகப் பெரிது.

தேர்தல் கள பொதுநிலை ஆய்வு, தொகுதிகளின் நிலை, கூட்டணிக் கட்சிகளின் கோரிக்கைகள், அவற்றோடு உரையாடுதல், வேட்பாளர் தேர்வு, கழகம் மற்றும் கூட்டணிக் கட்சித் தோழர்களின் ஒருங்கிணைப்பு, எதிர்க்கட்சிகள் தொகுதிகளில் உள்ள இருப்பு நிலை என இத்தனையையும் கவனித்து முடிவு எடுக்க வேண்டியவர் மு.க.ஸ்டாலின். இதன் பிறகு பரப்புரை - இது பெரும் பணி. தமிழ்நாடு முழுமையும் மக்களிடையே மு.க.ஸ்டாலின் சந்திப்பு நிகழ்ந்தாக வேண்டும். இவற்றையெல்லாம் 2019(நாடாளுமன்றம்) 2021(சட்டமன்றம்) 2024 (நாடாளுமன்றம்) ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் மு.க.ஸ்டாலின் சந்தித்தார். தொடர் வெற்றிகளைப் பெற்றார்.

தி.மு.க.வை ஆய்வு செய்வதற்கு என்று ஒன்றுமில்லை. ஏனெனில் அது கொள்கையின் மீதும் ‘ஸ்தாபன’ கட்டமைப்பின் மீது வழிவழி நிற்கும் இயக்கமுமாய் அரசியல் கட்சியாய் இயங்குகிற அமைப்பு. இது வீழ்ந்தால் தன்னிச்சையாக எழுந்து நின்று போராடும் வல்லமையை இயற்கையாகப் பெற்று இருக்கிறது. ‘டெபாசிட்’ இழந்த கட்சிகளில் ‘சலசலப்புகள்’ தொடங்கிவிட்டன. அதில் இரு நட்சத்திரங்களின் கட்சிகளை ‘அது கற்பூரமா - பீனிக்ஸ் பறவையா’ என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லும் என்று ஒரு பத்திரிகை எழுதி இருக்கிறது. கற்பூரம் காற்றானால் ‘வஸ்து’ இல்லாமல் போகும். பீனிக்ஸ் பறவையோ கற்பனை. இப்போது தி.மு.க.வை நினைத்துப் பாருங்கள். அதன் விழுமியம் எவ்வளவு உயர்ந்தது என்று தெரியவரும். மேலும் அது தமிழர்களுக்கு என்றும் தேவையானது.

பெரியாரும் அறிஞர் அண்ணாவும் இரண்டு உதாரணங்களை இருவருமே கையாண்டிருப்பார்கள். இவற்றை வெவ்வேறு கால கட்டங்களில் அவர்கள் பயன்படுத்தி இருப்பார்கள். (1) நாம் பாஷாணத்தில் புழுத்த புழுக்கள்; நம்மைப் பிறரால் அழித்துவிட முடியாது. (2) உதைத்த காலுக்கு முத்தமிடலாமா? - என்பவையே அந்த உதாரணங்கள். திராவிட இயக்கத்தின் வரலாற்றினைப் புரட்டிப் பாருங்கள். அதை அழிக்க நினைத்து சட்டத்தின் துணை நாடியபோது கூட தப்பித்து இருக்கிறது. ஆம்; பாஷாணத்தில் புழுவாக இருந்துவந்து இருக்கிறது. உதைத்த காலுக்கு முத்தமிடாமல் ‘இராஜரிகம்’ காட்டி அரசியலை நடத்தி வந்து இருக்கிறது.

பெரியார், அறிஞர் அண்ணாவின் பாணியை கலைஞர் அப்பட்டமாகப் பயன்படுத்தி திராவிட இயக்கத்தின் தனித்துவத்தைக் காப்பாற்றினார். இம்மூவரின் சூத்திரங்களை வெறும் முத்திரையாக்கி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் படம் காட்டவில்லை, அவர்களின் உயிர்த்துடிப்பை மு.க.ஸ்டாலினின் மூன்று வெற்றிகள் எதிரொலிக்கின்றன. (2019, 2021, 2024) இந்தத் தேர்தலில் பா.ஜ.க.வின் உதைத்த காலுக்கு தி.மு.க. முத்தமிடவில்லை. மாறாக, தனிப்பெரும்பான்மையைப் பெற முடியாமல் தி.மு.க. செய்திருப்பதற்கு மு.க.ஸ்டாலினே மூலக் காரணம் ஆவார்.

மு.க.ஸ்டாலின் தனி மனிதர் அல்லர். அவர் சங்க கால விழுமியங்களின் நூற்றாண்டைக் கடந்த இயக்கத்தின் அடையாளம், ‘திராவிடமா? அண்ணாவா? அதைப் பற்றிச் சொல்லுங்கள்’ என்று கேட்டால், ‘படித்தவர்களைத் தான் கேட்க வேண்டும்’ என்கிற தலைவர் இல்லை; நமது தலைவர். அமைப்பை - ஸ்தாபனத்தை - உணர்ந்தவர் அவர்! இருப்பினும் தி.மு.க.வின் அரசியல் எதிரிகள் பரப்புரையை மெல்ல 2026 சட்டமன்றத் தேர்தலைப் பற்றி இப்போதே கிளப்பத் தொடங்கிவிட்டனர். இவர்கள் மு.க.ஸ்டாலின் வலிமையையும் தி.மு.க.வின் கட்டமைப்பையும் அறியாதவர்கள். அவர் தனது பாதச் சுவடுகளை அழுத்தமாக வைத்து அரசியல் பயணம் செய்கிறார். அவர் அமைப்பையும் கூட்டணிக் கட்சிகளையும் அரசியல் எதிரிகளையும் அளந்தறிந்து செயல்படுபவர். அரசியலில் பகையை வளர்த்தெடுக்க விரும்பாதவர். பகையை நட்பாக்கிக் கொள்ள விரும்புபவர். அதனால்தான் அவர் வெற்றியின் உச்சியில் உலவுகிறார்.

அறிஞர் அண்ணா ஒரு முறை பேசுகிற போது ‘எந்த அமைப்பும் பலப்பட வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? அதன் நீடித்த தன்மை எப்படி இருக்கும்?’ - என்பது பற்றி பின்வருமாறு கூறினார்;

“ஸ்தாபனத்தின் மூலக் கருத்துக்கே முதல் இடம் தரப்பட வேண்டும். அப்போதுதான் ஸ்தாபனம் சிதையாமல் இருக்கும். ஸ்தாபன ஒற்றுமையை ஒரு முறை பாடுபட்டுச் சாதித்து விட்டு, அதைக் கண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டு, இனி கவலை இல்லை என்று இருந்துவிடக்கூடிய ஒரு சம்பவம் அல்ல,

“எப்போதும் விழிப்போடு இருந்துகொண்டு, அவ்வப்போது பழுது பார்த்துக் கொண்டு, எந்தச் சமயத்திலும் மூலக் கருத்து கெடாதபடியும் கவனித்துக் கொண்டிருந்தால் மட்டுமே காப்பாற்றக்கூடிய ஓர் அற்புதமான ஜீவ சக்தி, ஸ்தாபனத்தின் பலமும் பயனும் அந்த அய்க்கியத்தை - ஒற்றுமை உணர்ச்சியைப் பொறுத்தே இருக்கிறது. வீணை உயர்தரமானதானால், வித்வானும் உயர்ந்தவர்தான். ஆனால் வீணையின் ஒரு நரம்பு மட்டும் தளர்ந்து இருக்கிறது என்று சொன்னால் வீணையின் நாதமும் கெடும்; வித்வானின் இசையும் கெடும். ஸ்தாபனத்தின் ஒற்றுமை சங்கீதத்திற்கு உள்ள சுருதி போன்றது - மிக ஜாக்கிரதையாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்”

அறிஞர் அண்ணாவின் ‘ஸ்தாபனத்தைப் பற்றிய’ இக்கருத்தை கலைஞர் செயல்படுத்திக் காட்டியதை அருகே இருந்து பார்த்த அனுபவக் களஞ்சியமாகத் திகழுபவர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்! அவர் தொடர்ந்து பெற்ற முப்பெரும் வெற்றிகளை மேலும் பெற அவருக்குத் துணை நிற்போம். தி.மு.க. கட்டமைப்பைப் பாதுகாத்து முன் செல்வோம்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் மற்றும் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா வழிகாட்டுதலின்படி, மாவட்டக் கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில், இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சம்பத் ராஜா எம்.சி. ஏற்பாட்டில் இராமநாதபுரம் தெற்கு நகர், அக்ரஹாரம் ரோட்டில் அமைந்துள்ள சபா நடேசஐயர் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர் மிசா அஹமது தம்பி, மாநில விவசாய அணி துணை செயலாளர் குணசேகரன், நகர்மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், நகர் கழக செயலாளர் (தெற்கு) டி.ஆர். பிரவீன் தங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரமேஸ் கண்ணா, சத்தியேந்திரன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பி.டி.ராஜா, மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் சி.டி. துரை, வர்த்தக அணி துணை அமைப்பாளர் நாகூர்கனி, நகர் இளைஞரணி அமைப்பாளர் மகேந்திரன், வார்டு செயலாளர் சோலை சேகர், முன்னாள் துணை சேர்மன் ஜெகநாதன், இளைஞரணியினர் மற்றும் கழக தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்

## மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட த.வேணுகோபால் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், **மாவட்ட அவைத்தலைவர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2024, ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## ‘நான் முதல்வன்’ திட்டத்தால் 2022 - 2023 ஆம் ஆண்டில்

# 1.48 லட்சம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு!

## தமிழ்நாடு அரசு பெருமிதம்!

*சென்னை, ஜூன் 15 -*

*முதலமைச்சரின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் மூலம், 2022-23 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாக தமிழ்நாடு அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.*

*பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களை, படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டமாகிய நான் முதல்வன் திட்டம் 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.*

*அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு, ஆண்டுக்கு 10 லட்சம் பேருக்கு நான் முதல்வன் திட்டம் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 13 லட்சத்து 14 ஆயிரம் மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

*கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள் 8 லட்சத்து 53 ஆயிரத்து 605 பேர், பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 784 பேர் நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். 2023-24ம் கல்வியாண்டில் 10 பல்கலைக்கழகங்களை சேர்ந்த 26 ஆயிரத்து 394 ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. மைக்ரோசாஃப்ட், ஐபிஎம், இன்ஃபோசிஸ், எஸ்.ஏ.பி., கூகுள் கேம்பிரிட்ஜ், சிமன்ஸ், டசால்ட் உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து, செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ், மின் வாகனம், டிஜிட்டல் மார்க்கெட்டிங் உள்ளிட்ட துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த பயிற்சியின் மூலம் 2022-23 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 149 மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். 76.4 சதவிகிதம் பொறியியல் மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். 83.8 சதவிகிதம் கலை அறிவியல் மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். ஒன்றிய அரசின் சிவில் சர்வீஸ் தேர்வுகள் எழுதுபவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1000 பேருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.*

*நான் முதல்வன் திட்டத்தால் மாணவர்கள், இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.*

## காரைக்குடி 24வது வார்டில் தலைவர் கலைஞர் 101 வது பிறந்தநாள் விழா!

### நலத்திட்ட உதவிகள் வழங்கல். மாவட்ட மகளிர் தொண்டரணி ஏற்பாடு

சிவகங்கை, ஜூன் 15-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகர் 24வது வார்டில் மாமன்ற உறுப்பினரும் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் ஏற்பாட்டின் பேரில் முத்தமிழறிஞர் கலைஞர் 101வது பிறந்த நாளை முன்னிட்டு கழகக் கொடியேற்றியும், தலைவர் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தும், நலத்திட்ட உதவிகளையும் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையேற்று வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு மாநகரமேயர் எஸ்.முத்துதுரை, துணை மேயர் என். குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேம லதா செந்தில் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் நிர்வாகிகள் சேவியர், மாணவரணி அஷரப், செல்வம் எஸ். சந்திரன், செல்வராஜ், மெய்யப்பன், செல்வ முத்துக்குமார், விக்னேஸ்வரன், ராஜாராம், கிறிஸ்டோபர், செந்தில்குமார், கார்த்திக், மகளிர் அணி ஆனந்தி, வள்ளிகண்ணு, மாமன்ற உறுப்பினர் கலாகாசி நாதன் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஆர். கண்ணன்
### ஜூன் 15 (1976)



**தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, கழகம் தோன்றியபோது வாழ்நாள் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டு கழகத்தின்மீது நீங்காப் பற்றும், தணியாத ஆர்வமும் கொண்டு கொள்கை உறுதியோடு கழகப் பணி ஆற்றி வந்தார்.**

**1959ல் முதன்முதலாக கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சியின் அப்போதைய 27வது வட்ட மன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பணியாற்றியதோடு; 1967, 1971 ஆகிய இரண்டு முறை சென்னை, ‘பேசின்பிரிட்ஜ்’ சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**“நெஞ்சுரமிக்க தளபதி ஒருவரை சென்னை மாவட்டக் கழகம் இழந்துவிட்டது. அந்தோ! புயலையும் புன்னகையுடன் எதிர்த்து நிற்கும் ஆருயிர் உடன்பிறப்பையல்லவா நான் இழந்துவிட்டேன்” என ‘என் நெஞ்சில் நீயிருப்பாய், கண்ணா!’ என்ற கடிதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**